**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A.No.**75/2017
**E.P.No.**91/1997
**O.S.No.**193/1996

2018 **ஆண்டு ஜூலை மாதம்** 06 ம் **நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் கருப்பாள் வயது

த.பெ/க.பெ மதம்

முகவரி தொழில்

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 12 ம் சாட்சி (PW12) (06.07.2018)

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மனுச்சொத்து எங்களுக்கு வேண்டும் என இம்மனுவினை தாக்கல் செய்துள்ளோம். மனுச்சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. கடந்த 30 வருடங்களுக்கு முன்பு நான் மனுச்சொத்தில் குடியேரினேன். ஓரே சமயத்தில் 170 நபர்கள் மனுச்சொத்தில் குடிசை அமைந்தோம். மனுச்சொத்து முருகம்பாளையம் முனியனுக்கு பாத்தியப்பட்டதாக கிராம நிர்வாக அலுவலர் எங்களிடம் தெரிவித்து எங்களை மனுச்சொத்தில் குடிசை போடுமாறு தெரிவித்தார். எனது சொந்த ஊர் பொங்களூர் அருகாமையில் உள்ள நான்கு ரோடு ஆகும். மனுச்சொத்திற்கும் எனது சொந்த ஊருக்கும் சுமார் 10 மையில் தூரம் இருக்கும். மேலே குறிப்பிட்ட முருகம்பாளையம் முனியனை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி முருகேசன் நாங்கள் குடிசை அமைத்த போது மனுச்சொத்து அனுபவத்தில் இருந்தாரா என்றால் தாவாச்சொத்து அனுபவத்தில் இருந்தார். வாதி முருகேசன் எங்களுக்கு எதிராக திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், எங்களிடம் விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் குடிசை போட்டு 1 வருட காலம் கழித்து எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது.

எங்களுக்கு பட்டா வழங்கப்பட்ட போது தாவாச்சொத்தில் குடிசைகள் இருந்தன. முருகேசன் 170 நபர்கள் மீது திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மனுச்சொத்தை பொறுத்து 30.04.1990 ல் அசல் வழக்கு எண். 172/1990 தாக்கல் செய்து பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண். 193/1996 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண். 193/1996 ல் நான் 119 ஆம் பிரதிவாதி என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண். 193/1996 தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண். 193/1996 தீர்ப்பினை எதிர்த்து திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண்.34/2002 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல் முறையீட்டு வழக்கில் நான் 71 ஆம் மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கு எண் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல நிலுவையில் உள்ளது. மேல் முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், வழக்கு நிலுவையில் இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு வருடத்திற்கு முன்பு நீதிமன்ற அமினா நிறைவேற்று மனு 91/1997 ல் மனுச்சொத்தினை சுவாதீனம் எடுப்பதற்கு வந்தார் என்றால் சரிதான். அச்சமயம் EA.14/2017 மனுவினை நானும் மற்ற மனுதாரர்களும் எங்களுக்கு எதிரான ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்யுமாறு மனு செய்தோம் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நான் 34 வது மனுதாரர் என்றால் சரிதான். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவில் வழங்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், ஆகையால் தான் இம்மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. குப்பாத்தாள், கிருஷ்ணவேணி, பாப்பம்மாள், பாப்பாத்தி, ராஜம்மாள், சரசால், பார்வதி ஆகியோர்களை தெரியும் என்றால் சரிதான். குப்பாத்தாள், கிருஷ்ணவேணி, பாப்பம்மாள்,

பாப்பாத்தி, ராஜம்மாள், சரசால், பார்வதி ஆகியோர் EA.50/2008 மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி மனு 23.11.2009 தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். முருகேசன் தற்போது இறந்து விட்டார் என்றால் சரிதான். முருகேசன் இறப்பதற்கு முன்பு சொத்துக்களை என்ன செய்தார் என்று எனக்கு தெரியுமான என்றால் எனக்கு தெரியாது. தனலெட்சுமி, தங்கசாமியை தெரியுமான என்றால் தெரியும். நீதிமன்ற அமினா வந்த போது தனலெட்சுமி, தங்கசாமியும் உடன் வந்தார்கள். முருகேசன் சொத்துக்களை தனலெட்சுமி, தங்கசாமிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. முருகேசன் உயிலின் படி தனலெட்சுமி, தங்கசாமிக்கு தாவாச்சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அரசு வழங்கிய பட்டா செல்லது என்று தீர்ப்பான விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தீர்ப்பின் விபரத்தை பற்றி யாரும் என்னிடம் சொல்லவில்லை. இம்மனுவினை என்னிடம் படித்து காண்பித்தார்கள். வழக்கின் தீர்ப்பினை யாரும் என்னிடம் படித்து காண்பிக்க வில்லை. அசல் வழக்கில் எங்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா தவறானது என்றும், அதனை ரத்து செய்ய வேண்டி நாங்கள் தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், தாவாச்சொத்து சுவாதீனம் கொடுப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம் என்றும், அதனை தவிர்க்கவேண்டி ஏற்கனவே தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி ஆகியுள்ள நிலையில் அதே காரணங்களுக்காக தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் இவ் அசல் வழக்கில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது என்றும், ஆகையால் இம்மனு ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. தாவாச்சொத்தினை சுவாதினம் கொடுப்பதை காலதாமதம் படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும்

இவ்வழக்கிற்காக தாவாவிற்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஆவணங்கள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A.No**.75/2017
**E.P.No**.91/1997
**O.S.No**.193/1996

2018 **ஆண்டு ஜுலை** மாதம் 06 ம் **நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் அருக்காணி வயது

த.பெ/க.பெ மதம்

முகவரி தொழில்

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 13 ம் சாட்சி (**PW**13) (06.07.2018)

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மனுச்சொத்து எங்களுக்கு வேண்டும் என இம்மனுவினை தாக்கல் செய்துள்ளோம். கடந்த 30 வருடங்களுக்கு முன்பு நான் மனுச்சொத்தில் குடியேரினேன். எனது சொந்த ஊர் செட்டிபாளையம் ஆகும். தாவாச்சொத்தில் 10 நாட்களுக்குள் 150 நபர்கள் மனுச்சொத்தில் குடிசை போட்டோம். மாவட்ட ஆட்சியர், தாசில்தார், கிராம நிர்வாக அலுவலர் சொன்னதன் அடிப்படையில் தாவாச்சொத்தில் குடிசை போட்டோம். நாங்கள் குடிசை போட்டு 1 வருட காலம் கழித்து எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. குடிசைப்போட்ட சமயத்தில் தாவாச்சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. முருகேசனை நான் பார்த்துள்ளேன். குடிசைப்போட்ட சமயத்தில் முருகேசன் தாவாச்சொத்தில் இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் குடிசைப்போட்ட தாவாச்சொத்தானது சுமார் 4 ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு அருகில் உள்ள இடம் மனையிடம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.
முருகேசன் 170 நபர்கள் மீது திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மனுச்சொத்தை பொறுத்து 30.04.1990 ல் அசல் வழக்கு எண். 172/1990 தாக்கல் செய்து

பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண். 193/1996 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண். 193/1996 ல் நான் 53 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 193/1996 தீர்ப்பானது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 193/1996 தீர்ப்பினை எதிர்த்து திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண்.34/2002 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல் முறையீட்டு வழக்கில் நான் 24 ஆம் மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கு எண் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல நிலுவையில் உள்ளது. மேல் முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், வழக்கு நிலுவையில் இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அனைவருக்கும் பட்டா பிரிந்து வழங்கப்பட்டன. மேல்முறையீடு தாக்கல் செய்து சுமார் 20 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். பத்து வருடத்திற்கு முன்பு நீதிமன்ற அமினா வந்தார்கள் என்றால் சரிதான். குப்பாத்தாள், கிருஷ்ணவேணி, பாப்பம்மாள், பாப்பாத்தி, ராஜம்மாள், சரசால், பார்வதி ஆகியோர்களை தெரியும் என்றால் சரிதான். குப்பாத்தாள், கிருஷ்ணவேணி, பாப்பம்மாள், பாப்பாத்தி, ராஜம்மாள், சரசால், பார்வதி ஆகியோர் EA.50/2008 மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி மனு 23.11.2009 தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ஒரு வருடத்திற்கு முன்பு நீதிமன்ற அமினா வந்தார்கள் என்றால் சரிதான். அச்சமயம் EA.14/2017 மனுவினை நானும் மற்ற மனுதாரர்களும் எங்களுக்கு எதிரான ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்யுமாறு மனு செய்தோம் என்றால் சரிதான். மேற்படி மனுவில் 10 வது மனுதாரர் என்றால் சரிதான். மேற்படி மனு 26.04.2017 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு என்ன ஆனது என்றால் எனக்கு தெரியாது. சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி

செய்யப்பட்டதால் இம்மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. முருகேசனை தெரியும் அவர் இறந்து விட்டார். முருகேசன் இறப்பதற்கு முன்பு சொத்துக்களை யாருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது. தனலெட்சுமி, தங்கசாமியை தெரியுமான என்றால் தெரியும். முருசேகன் தனலெட்சுமி, தங்கசாமி பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. முருசேகன் தனலெட்சுமி, தங்கசாமி பெயரில் எழுதி வைத்த உயிரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. முருகேசன் உயிலின் படி தனலெட்சுமி, தங்கசாமிக்கு தான் மனுச்சொத்து பாத்தியம் என்றும், அவர்களுக்கு மனுச்சொத்தை பாத்தியம் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் நாங்கள் தாக்கல் செய்த எதிர்வாதம் ஏற்க்கொள்ளப்படவில்லை என்றும், மேல் முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்றும் அதே காரணத்திற்காக வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் இவ் அசல் வழக்கில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது என்றும், ஆகையால் இம்மனு ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. தாவாச்சொத்தினை சுவாதினம் கொடுப்பதை காலதாமதம் படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக தாவாவிற்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஆவணங்கள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.